**தெரணியகல பிரதேச சபை**
**கேகாலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியன்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஜுன் 28 ஆந் திகதியன்று சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களினாலான தாக்கங்களைத் தவிர, நிதிசார் கூற்றுக்களில் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான தெரணியகல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயற்பாடு மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு ஏற்ப உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையைத் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டிற்கான ரூபா 2,800,000 நீதிமன்றத் தண்டப் பண வருவாயைப் பட்டியலிடுவதற்குக் கொடுப்பனவு செய்ய வேண்டிய ஊக்குவிப்படியான ரூபா 140,000 தொடர்பாக நிதியேற்பாடு மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் ஜுலை முதல் டிசெம்பர் வரையான காலத்திற்குரிய முத்திரைக் கட்டண வருவாயின் பொருட்டுக் கொடுப்பனவு செய்ய வேண்டிய குறிப்புப் பத்திரக் கட்டணம் மற்றும் ஆண்டிற்கான கணக்காய்வுக் கட்டணம் என்பவற்றிற்கு நிதியேற்பாடு மேற்கொள்ளப்படவில்லை.

(இ) 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் அமுலாகிய 02 வேலைகளுக்குரிய நிறுத்தி வைத்த பணமான ரூபா 39,072 மீண்டும் செலுத்தப்பட்டிருந்தபோதும், அதனைப் பொது வைப்பின் கீழ் காட்டியமையால் ஆண்டிற்கான பொறுப்பு அதேயளவு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) 2010 முதல் 2015 வரை நீர்ப்பாவனையாளர்கள் நீர் வழங்கலுக்குச் செலுத்திய ரூபா 2,305,983 வைப்புத் தொகை நீர்வழங்கல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்ட போதும், பொது வைப்பின் கீழ் காட்டப்பட்டமையால் பொது வைப்புக் கணக்கு மீதி அதேயளவு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) புரநெகும செயற்திட்டத்தின் கீழ் 02 கணனிகளதும் 02 யுபீஎஸ்களதும் நானாவித மொடியூல் இயந்திரத்தினதும் பெறுமதி கணிப்பிடப்பட்டுக் கணக்கிலிடப்படாமையால் நிலையான சொத்துக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) சபை வீதியை நிர்மாணிக்கும் மூலதனச் செலவினத்தின் கிழ் கொள்வனவு செய்யப்பட்ட ஹியூம் குழாய்களின் மீளாய்வாண்டு இறுதியிலான கையிருப்புப் பெறுமதி ரூபா 611,464 ஆகும். இதனைக் கணக்கிலிடாததால் மூலதனச் செலவினம்

அதேயளவு அதிகரித்தும் நிலையான சொத்துக்களின் பெறுமதி அதேயளவு குறைத்தும் காட்டப்பட்டிருந்தன.

(எ) வழங்கல்கள் மற்றும் உபகரணச் செலவினத்தை செலவினக் கட்டுப்பாடு மற்றும் கடன் கொடுத்தோர் கட்டுப்பாட:டுக் கணக்குகளின் மூலம் சீராக்கல் செய்யாது நேரடியாகச் செலவினத் தலைப்பில் வரவு வைத்தல் மூலம் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(ஏ) கோவைகளை அடுக்கி வைக்கும் ராக்கையைக் கொள்வனவு செய்வதற்குச் செலவாகிய ரூபா 15,800 மீண்டுவருஞ் செலவின விடயமாக எழுது கருவி வகைப் பொருட்கள் மற்றும் அலுவலக உபகரண செலவினத் தலைப்பின் கீழ் கணக்கிலிடப்பட்டதால் மீண்டுவருஞ் செலவினம் அதிகரித்தும் மூலதனச் செலவினம் குறைத்தும் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) சபைக்குச் சொந்தமான 01 ஏக்கர், 03 றூட், 30 பர்ச்சஸ் கொண்ட 03 காணித் துண்டுகளின் பெறுமதி கணிப்பிடப்பட்டுக் கணக்கிலிடப்படாமையால் காணி மற்றும் கட்டிடங்களது பெறுமதி குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஒ) மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 நிலையான வைப்புக் கணக்குகளுக்குப் பெற வேண்டிய வட்டி ரூபா 166,336 ஆகும். எனினும், அது ரூபா 248,966 ஆகக் கணக்கிலிடப்பட்டமையால் மீளாய்வாண்டினது பற்றாக்குறை ரூபா 82,630 குறைத்தும் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான வருவாய்க் கடன்பட்டோரினது பெறுமதி அதேயளவு அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தன.

(ஓ) உள்ளுராட்சி வீதி அபிவிருத்தி மற்றும் கமநெகும நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின்போது பூர்த்தி செய்யப்பட்ட 07 வேலைகளுக்குரிய 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு கொடுப்பனவு செய்ய வேண்டிய மூலதனச் செலவினமும் பெற வேண்டிய மூலதன உதவிகளது பெறுமதியும் ரூபா 358,252 ஆகும். எனினும் அது ரூபா 597,946 ஆகக் கணக்கிலிடப்பட்டதால் கொடுப்பனவு செய்ய வேண்டிய மூலதனச் செலவினம் மற்றும் பெற வேண்டிய மூலதன உதவி என்பவற்றின் பெறுமதி ஒவ்வொன்றும் ரூபா 239,694 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

### 1.3.2 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 02 கணக்கீட்டு விடயங்களது மீதி ரூபா 4,312,081 ஆகியபோதும், உப பதிவேடுகள்/அறிக்கைகளின் பிரகாரம் மீதி ரூபா 1,925,192 ஆக இருந்தமையால் கணக்கிணக்கஞ் செய்யப்படாத வித்தியாசம் ரூபா 2,386,889 ஆகவிருந்தது.

கணக்கின் பிரகாரம், பொது வைப்பின் பெறுமதி ரூபா 7,342,014 ஆகியபோதும், பொது வைப்புப் பதிவேடு கணக்கிணக்கஞ் செய்யப்படாமையால் அது சரியானதா என்பதை உறுதிசெய்ய முடியவில்லை.

### 1.3.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

(அ) 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பெற வேண்டிய கணக்கு மீதிகளது பெறுமதி ரூபா 47,655,242 ஆகியதுடன் அதில் ரூபா 29,564,596 ஓராண்டிற்கு மேற்பட்ட பழமை வாய்ந்த மீதிகளாகும்.

(ஆ) 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்கு மீதிகளது பெறுமதி ரூபா 37,216,560 ஆகியதுடன் அதில் ரூபா 1,399,332 ஓராண்டிற்கு மேற்பட்ட பழமை வாய்ந்த மீதிகளாகும்.

### 1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கீழே காணப்படும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 158(1) ஆம் பிரிவு | தீர்வை வரிக்குரிய 10 சொத்துக்களிலிருந்து ரூபா 94,946 மற்றும் ஏக்கர் வரியாக ரூபா 158,980 மீதி என்பவற்றை அறவிடுவதற்குக் குறித்த பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஆ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் நி.பி 371(5) | 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 60,687 முற்பணம் தீர்த்து வைக்கப்படாதிருந்தது. |
| (இ) இலங்கை குடியரசின் தாபன விதிக் கோவையினது XXIV அத்தியாயத்தின் 1.6 மற்றும் 4 ஆம் பிரிவுகள் | 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 09 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 242,384 கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஈ) 2014 நவெம்பர் 12 ஆந் திகதிய 2014/25 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | தற்காலிக, அமைய (நாட் சம்பளம்), பிரதியீடு, ஒப்பந்த அல்லது சலுகை அடிப்படையில் ஊழியர்கள் ஆட்சேர்க்கப்படும்போது முகாமைத்துவத் திணைக்களத்தின் அங்கீகாரம் ஏற்கனவே பெறப்பட்டிருக்க வேண்டுமாயினும், அதற்கு முரணாக மீளாய்வாண்டின்போது ஆட்சேர்க்கப்பட்டட 10 ஊழியர்களுக்கு சம்பளமும் படியுமாக ரூபா 1,547,228 வழங்கப்பட்டிருந்தது. |
| (உ) ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் 2011 ஜுலை 20 ஆந் திகதிய 02/2011 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | அமைய, தற்காலிக, பிரதியீட்டு, நாட் சம்பளம் பெறும் சகல ஊழியர்களும் அரசாங்க சேவை சேமலாப நிதியத்திற்குப் பங்களிப்புச் செய்ய வேண்டுமாயினும், சேவை உடன்படிக்கை மூலம் ஆட்சேர்க்கப்பட்ட 22 ஊழியர்களுக்கு ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கென ரூபா 110,310 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2015 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 3,608,013 ஆகும். இதற்கெதிரான முன்னைய ஆண்டின் வருவாயிலும் கூடிய மீண்டுவருஞ் செலவினம் ரூபா 5,519,908 ஆகும். இதனால் மீளாய்வாண்டிற்கான நிதிப் பெறுபேறுகளில் ரூபா 9,127,921 அதிகரிப்பு தென்படுகின்றது.

## 2.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

நிதிசார் கூற்றுக்களின் ரூபா 9,127,921 அதிகரிப்பிற்கு 03 வருவாய் விடயங்களிலான அதிகரிப்பும் 04 செலவின விடயங்களிலான குறைவுமே காரணிகளாகின.

## 2.3 வருவாய் நிர்வாகம்

### 2.3.1 வருவாய்ச் சேகரிப்பிலான செயலாற்றல்

செயலாளரால் மீளாய்வாண்டிற்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளவாறான வருவாய் மற்றும் வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

**2015.12.31 இல் உள்ளவாறான நிலுவை**

| | வருவாயினது தோற்றுவாய் | 2015.0101 இல் உள்ளவாறான நிலுவை | 2015.12.31 இல் உள்ளவாறான நிலுவையில் அறவீடு | 2015 ஆம் ஆண்டிற்கான பட்டியல் தொகை | ஆண்டிற்கான பட்டியலில் அறவீடு | 2015.01.01 இல் உள்ளவாறான நிலுவை மீதி | ஆண்டிற்கான பட்டியலிடப்பட்ட தொகையில் நிலுவை | மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| (i) | தீர்வை வரியும் | 2,787,771 | 1,828,186 | 5,725,671 | 4,150,722 | 959,585 | 1,574,949 | 2,534,534 |
| (ii) | குத்தகை வாடகை | 318,969 | 274,760 | 4,055,058 | 3,957,423 | 44,209 | 97,635 | 141,844 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 102,850 | 17,250 | 477,425 | 477,425 | 85,600 | - | 85,600 |
| (iv) | ஏனைய வருவாய் | 40,795,282 | 12,320,080 | 80,592,652 | 61,412,612 | 28,475,202 | 19,180,040 | 47,655,242 |

### 2.3.2 அனுமதிப் பத்திரக் கட்டணம்

சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள வர்த்தக நிறுவனங்களிலிருந்து 2014 ஆம் ஆண்டிற்கான அனுமதிபத்திரக் கட்டண நிலுவையான ரூபா 79,100 மற்றும் மீளாய்வாண்டிற்கான 10 தச்சுத் தொழிற்சாலைகளிலிருந்து அறவிட வேண்டிய வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டண வருவாயான ரூபா 10,000 என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.3.3 ஏனைய வருவாய்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2014 ஆம் அண்டில் 06 முச்சக்கரவண்டித் தரிப்பிடங்களில் உள்ள 100 முச்சக்கர வண்டிகளிலிருந்து ரூபா 99,900 மற்றும் 2015 ஆம் ஆண்டில் 196 முச்சக்கர வண்டிகளிலிருந்து ரூபா 219,300 என மொத்தமாக ரூபா 319,200 தரிப்பிட வாடகை நிலுவையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) நிலுவையாக ரூபா 2,000 க்கு மேற்பட்ட தொகையைக் கொண்டிருக்கும் 37 நீர் வழங்கும் நிலையங்களிலிருந்து நீர் நிலுவைத் தொகையாகிய ரூபா 276,170 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) நகரின் விற்பனை நிலையங்களில் பொருத்தப்பட்டிருந்த 18 விளம்பரப் பலகைகளுக்குரிய கட்டணம் அறவிடப்படவில்லை.

(ஈ) பெக்கோ லோடர் இயந்திரத்தை வாடகைக்கு வழங்கியதன் மூலம் தேசிய நீர்வழங்கல், வடிகாலமைப்புச் சபையிடமிருந்து 47.1 இயந்திர மணித்தியாலங்களுக்கு ரூபா 117,750 மற்றும் பொல்கஸ்வத்த கமநெகும கிராமிய நிறுவனத்திடமிருந்து 33.5 இயந்திர மணித்தியாலங்களுக்கு ரூபா 83,750 என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(உ) சபையின் அதிகாரத்துக்குட்பட்ட இடங்களில் பொருத்தப்பட்டுள்ள 04 தொலைபேசிக் கோபுரங்களுக்கான வியாபார வரியாகிய ரூபா 12,000 அறவிடப்படவில்லை.

### 2.3.4 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபையின் தலைமைச் செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய தொகை பின்வருமாறு.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்றத் தண்டப்பணம் | 4,540,586 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 3,185,807 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

(அ) சபையின் தீர்மானப்படி ஓராண்டிற்கு மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்படுவதற்கான அடிப்படையில் பணிக்கமர்த்தப்பட்ட 11 ஊழியர்களது சேவை உடன்படிக்கைக் காலம் முடிவடைந்ததையடுத்து சம்பளமும் படியுமாக ரூபா 1,243,809 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் சேவை உடன்படிக்கையில் ஈடுபடாத 3 ஊழியர்களது பணிக்கு ரூபா 371,637 கொடுப்பனவு செய்யப்பட்டுமிருந்தது.

(ஆ) சபையின் நூலகத்தினது நூலகங்களுக்கு 1993 முதல் 2014 வரையான அமைய சேவைக் காலத்தின்போது ஊழியர் சேமலாப நிதியத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 105,232 மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 28,962 என்பவற்றை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட 16 ஊழியர்களுக்கு 2009 நவெம்பர் முதல் டிசெம்பர் வரை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ரூபா 106,882 மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு ரூபா 26,721 என வழங்கப்பட்டிருந்ததுடன், அக்காலப் பகுதியின்போது விதவைகள், அநாதைகள் ஓய்வூதியப் பங்களிப்பும் வழங்கப்பட்டிருந்தது.

**3.2 செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

வெளிக்கள உத்தியோகத்தர்கள் தமது எதிர்கால நிகழ்ச்சித்திட்டத்தை பயணஞ் செய்யவுள்ள மாதத்திற்கு முன்னைய மாதமே நிறுவனத் தலைவருக்குச் சமர்ப்பித்து அதனை அங்கீகரித்துக் கொள்ள வேண்டுமாயினும், ஒரு வெளிக்கள உத்தியோகத்தர் 2015 ஜுன் முதல் டிசெம்பர் வரை தனது எதிர்கால நிகழ்ச்சித் திட்டத்தைச் சமர்ப்பித்து அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டிருக்கவில்லை.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

**(அ) தெரணியகல பஸ் தரிப்பிடக் கழிவறையை நிர்மாணித்தல்**

2014 நொவெம்பர் 25 ஆந் திகதி ரூபா 994,145 செலவழித்து தெரணியகல பொது பஸ் தரிப்பிட வளவில் நிர்மாணித்த பணம் அறவிடும் அடிப்படையிலான தனியார் கழிவறைகள் இரண்டும் கழிவு பொருட்களைச் சேகரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருந்தமை 2016 மே 09 ஆந் திகதிய நேரடிப் பரிசோதனையின்போது அவதானிக்கப்பட்டது.

**(ஆ) லிஹினியாகல ரிவர்சைட் தோட்ட பங்களாவிற்கு அருகில் நீர்த்தடுப்பு அரணை அமைத்தலும் வீதியைக் கொங்கிரீட் இடலும்**

பிரதேச சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தரால் தயாரிக்கப்பட்ட அளவை அறிக்கையில் 6 ஆம் வேலை விடயத்தின் கீழ் 50 அடி நீளம், 10 அடி அகலம், 5.33 அங்குலத் திண்மத்துடனான வீதிக்கு கொங்கிரீட் இடுவதற்கு 2.21 கியூப் கொங்கிரீட் பயன்படுத்தப்பட்டதாகக் குறிப்பிட்டு ரூபா 88,190(2.21X39,905) 2015 டிசெம்பர் 21 ஆந் திகதியன்று வழங்கப்பட்டது. 2016 மே 06 ஆந் திகதியன்று வேலை நேரடியாகப் பரிசோதனை செய்யப்பட்டபோது 48 அடி நீளமும் (இரு பக்கத்திலும் 24 அடி நீர்த்தடுப்பு அரண் வீதம்) 9.6 அடி அகலமும் 5.33 அங்குலத் திண்மமும் உடைய வீதிக்கு கொங்கிரீட் இடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதற்கமைய, 2.04 கியூப் கொங்கிரீட்டுக்கான வேலை மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்ததால் 0.17 கியூப் கொங்கிரீட்டுக்கு ரூபா 6,783 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது தெரிய வந்தது.

**(இ) உடபொல எந்தகல வீதியைக் கொங்கிரீட் இடல்**

சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தரால் தயாரிக்கப்பட்ட அளவை அறிக்கையின் வேலை விடயம் இலக்கம் 2க்கமைய, 1.24 சீமெந்து, மணல் கலவையின் மூலம் 48 மீட்டர் நீளமும் 2.50 மீட்டர் அகலமும் 0.125 அங்குலத் திண்மமும் உடைய வீதிக்குக் கொங்கிரீட் இடுவதற்கு 15 கன மீட்டர் கொங்கிரீட் (48X2.5X0.125) பயன்படுத்தப்படுவதற்கு ரூபா 203,880 (15X13,592) கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2016 மே 06 ஆந் திகதியன்று வேலையை நேரடியாகப் பரிசோதித்தபோது 47.1 மீட்டர் வீதிக்கு மாத்திரமே கொங்கிரீட் இடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அதன் பொருட்டு 14.7 கனமீட்டர் கொங்கிரீட்

(47.1X2.5X0.125) பயன்படுத்தப்பட்டிருந்ததும் தெரிய வந்தது. இதற்கமைய, 0.3 கனமீட்டர் கொங்கிரீட்டுக்கு ரூபா 4,077 கூடுதலாக ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்தது அவதானிக்கப்பட்டது.

### 3.4 சொத்து முகாமைத்துவம்

**குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

மீளாய்வாண்டிற்கான இயந்திர சாதனப் பெறுமதியின் கீழ் காட்டப்பட்டிருந்த பின்வரும் இயந்திரங்கள் பாவனையற்றிருந்தன.

| சொத்து வகை | பெறுமதி |
|---|---|
| | ரூபா |
| தார் பொய்லர் | 70,000 |
| கொங்கிரீட் கலவை இயந்திரம் | 185,000 |
| கொங்கிரீட் உற்பத்தி இயந்திரம் | 168,789 |

### 3.5 சுற்றாடல் பிரச்சினைகள்

(அ) சபையின் அதிகாரத்துக்குட்பட்ட இடங்களில் சேகரிக்கப்படும் குப்பை கூளங்களைக் கழிவுப் பொருள்மீள்சுழற்சிக்கு உட்படுத்தவோ அல்லது அவற்றை முறைப்படி அகற்றுவதற்கோ விதிமுறைகள் இல்லாது, சீதாவக கங்கை அருகே உள்ள மயான வளவில் திறந்த வெளியில் அவை அகற்றப்பட்டிருந்தன.

(ஆ) சபையின் நீர் வழங்கல் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் நீரில் பாதகமான நுண்கிருமிகள் உள்ளதாக உணவு மற்றும் நீர்த் திணைக்களத்தின் நீர் மாதிரியினது பரிசீலனை மூலம் தெரிவிக்கப்பட்டிருந்தபோதும், நீரைச் சுத்திகரித்து வழங்குவதற்கான விதி முறைகள் கடைப்பிடிக்கப்படவில்லை.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட வரவு, செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட 05 செலவின விடயங்களது மொத்தத் தொகையான ரூபா 105,000 நூறு சதவீதமும், 09 செலவின விடயங்களது மொத்தத் தொகையான ரூபா 529,767 எழுபத்தைந்து முதல் 99 சதவீதமும் என கூட்டு மொத்தமாக ரூபா 634,767 சபையின் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படவில்லை.

### 4.2 பதில் வழங்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்

மீளாய்வாண்டில் சமர்ப்பிக்கப்பட்ட 2 கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதில் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு
(இ) கடன் கொடுத்தோர் கட்டுப்பாடு
(ஈ) வருவாய் நிர்வாகம்
(உ) வரவு, செலவுத் திட்டம்